LIBRARY
6 DEC 1963
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 29th March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

குடிசைவாழ் பகுதிகள் (மயிலாப்பூர்)

*418 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மயிலாப்பூர் தொகுதிக்குள் எத்தனை குடிசை வாழ் பகுதிகள் (1) கோயில் மனைகளில் (2) தனியார் மனைகளில் (3) சர்க்கார் புறம்போக்குகளில் உள்ளன?

(இ) 1963-ல் மயிலாப்பூர் குடிசைவாழ் பகுதிகளில் எத்தனை சீரமைப்புக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) மயிலாப்பூர் தொகுதியிலுள்ள குடிசைவாழ் பகுதிகளாவன—

1.	கோயில் நிலங்களில்	7
2.	தனியார் நிலங்களில்	48
3.	அரசாங்க நிலங்களில்	12
4.	ஓரளவு அரசாங்க நிலங்களிலும், ஓரளவு கோயில் நிலங்களிலும்.	2
5.	ஓரளவு தனியார் நிலங்களிலும், ஓரளவு கோயில் நிலங்களிலும்.	1
		70

(இ) இவற்றில் ஏழு பகுதிகள் அடங்குகிற ஐந்து திட்டங்கள் இந்த ஆண்டு நிறைவேற்றப்படுவதாக எடுத்துக் கொள்ளப்படலாம்.

திரு. இராம. அரங்கண்ணல்: ஸார், இந்த குடிசைவாழ் பகுதிகளில் எத்தனை இடங்களில் மனை வாங்கும் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மனை வாங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதனால் என்னிடம் தகவல் இல்லை.

[29th March 1963

திரு. இராம. அரங்கண்ணல் : குடிசைவாழ் மக்கள், அவர்களாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து மனை வாங்குவதற்கு முன் வந்தால் அரசாங்கம் ஆதரவு தருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எஞ்சி இருக்கிறவர்களுக்கு என்ன செய்வது என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதைப் பரிசீலிக்கலாம். ஏனென்றால் குடிசைவாழ்ப் பகுதியில் ஒரு ஏக்கருக்கு சற்றேறக்குறைய 150 முதல் 200 வரை மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் எத்தனை பேர் நிலத்தை வாங்கிக்கொள்வார்கள், நிலம் கிடைக்காதவர்கள் எங்கே போவார்கள் என்ற பிரச்சனை எல்லாம் எழுகிறது.

திரு. கே. பொன்னையா : தலைவர் அவர்களே, நமது சர்க்காரில் குடிசைவாழ் மக்களுக்கு மனை வாங்கிக் கொடுத்து, டவுன் பிளானிங் அமைத்துக் கொடுத்தால் போதும், வீடுகளை அவர்களே கட்டிக்கொள்வார்கள் என்ற கொள்கை இருந்ததே, அந்தக் கொள்கை எந்த நிலையில் இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எங்கெல்லாம் போதுமான இடம் கிடைக்கிறதோ அந்த இடத்தில் **Open Developed plots** கொடுக்கிறோம். எங்கெல்லாம் போதுமான இடம் இல்லையோ அங்கெல்லாம் **tenements** கட்டி எவ்வளவு அதிகமாக அங்கே அவர்கள் வசிக்கச் செய்யலாமோ அந்த விதம் செய்கிறோம்.

திரு. கி. இரா. சம்பந்தம் : ஸார், சர்க்காருடைய புறம்போக்கு நிலத்தை குடிசை வாழ்வோர் தங்களுக்கு ஆர்ஜிதம் செய்து கொடுக்கவேண்டுமென்று சர்க்காருக்கு மனு கொடுத்தார்களா ? அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்தால் எத்தனை ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான நிலம் ஆர்ஜிதம் செய்துகொடுக்கப்படமாட்டாது என்று திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஸார், மயிலாப்பூரில் காலியாக இருக்கிற தரிசு நிலங்களைப் பற்றி சர்வே செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்லம்ஸ் பற்றித்தான் சர்வே செய்திருக்கிறார்கள். காலி நிலங்களை சர்வே செய்வதாய் இருந்தால் அது பொருத்தமாய் இருக்காது. யார் யாருக்கோ சொந்தமாக இருக்கும் நிலங்களை சர்க்கார் போய் சர்வே செய்து கொண்டிருப்பது அவ்வளவு சரியல்ல.

திரு. காஞ்சி மணிமொழியார் : தலைவர் அவர்களே, கோவில் நிலங்களில் குடிசைகள் இருந்தால் அந்த நிலங்களை நீண்டகால குத்தகைக்கு எடுத்து அதை சீர்திருத்துவதற்கு சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கே எவ்வளவு பேர்கள் வசிக்கலாமோ அதற்கு அதிகமான பேர்கள் வசிக்கிற காரணத்தினால் அவர்களுக்கு அந்த இடத்தை லீஸுக்கு எடுத்துக் கொடுக்கவோ அல்லது வேறு வசதி செய்து கொடுக்கவோ முடியவில்லை.

வா